அடையாற்றை ஆழப்படுத்தும் திட்டம்

228—(*வினா எண் 7695) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அடையாறு ஆற்றினை ஆழப்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) பணி விரைவில் மேற்கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ): இந்தப்பணி நடைபெற்று வருகிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறு ஆற்றில் வெள்ளத் தடுப்புச் சுவர்கள் கட்டுகின்ற பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்தப் பணியின் வாயிலாக அந்தப் பகுதி மக்கள் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அடையாறு ஆற்றினை ஆழப்படுத்தவேண்டுமென்ற கோரிக்கை நீண்ட நாட்களாக இருக்கிறது. அதிகமாக வெள்ளம் வரும்பொழுது, குறிப்பாக பாரி நகர், சாரதி நகர், விநாயகபுரம், ஆஸ்பத்திரி சாலை, கிஃவர் நகர், ஆற்றுமா நகர், கோட்டூர்புரம், செட்டித்தோட்டம், கஸ்டம்ஸ் காலனி போன்ற பகுதிகள் கடுமையான தாக்குதலுக்கு ஆளாக்கப்படுகின்ற காரணத்தினால் அந்தப் பகுதிகளிலே ஆற்றை ஆழப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல, அதற்கான திட்டங்களைத் தீட்டி, மத்திய அரசுக்கு வெள்ள நிவாரணத்திட்டத்தின்கீழ் ரூ. 12 கோடி மதிப்பிட்டு நிதி கேட்டிருந்தோம். ஆனால் அதிலே ரூ. 2 கோடிதான் ஒதுக்கீடு செய்தார்கள். அந்த ரூ. 2 கோடிக்கான வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இந்த ஆற்றினை ஆழப்படுத்தினால் மட்டும்

1987 மார்ச் 28]

போதாது. நடுவிலேயுள்ள பல பாலங்களை உயர்த்திக்கட்ட வேண்டும். அதற்கு வேண்டிய நிதிகளைப் பெற்று, உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

திருமதி டி. யசோதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடையாறு ஆற்றுக்குத் தண்ணீர் வருவது செம்பரம்பாக்கம் ஏரி முழுமையும் நிரம்பியதற்குப் பிறகுதான். அதைத் திறந்துவிடுகிறபோது அந்நீர் வந்து அடையாறு நிரம்புகிறது. முன்பு கூட வெள்ளம் வந்தபோது நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் படகிலே வந்து அதற்குப் பிறகு காரிலே சென்னைக்கு வந்தார் என்று பத்திரிகையிலே பார்த்தோம். அதுபோன்று செம்பரம்பாக்கம் ஏரி நிரம்பியதற்குப் பிறகு அங்கே திறந்து விடப்படுகின்ற நீர் நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுடைய வீட்டிற்கு முன்னால் இருக்கிற மணப்பாக்கம் பகுதியிலே வந்து தான் இந்த அடையாறு ஆற்றுக்கு வருகிறது. ஆகவே அதனைத் தடுப்பதற்கு செம்பரம்பாக்கம் ஏரியையும் ஆழப் படுத்த வேண்டுமென்ற நிலையில், இந்த ஏரியைத் திறந்து விடுவதன் காரணத்தால், இயற்கையாக வெள்ளம் ஏற்படாமல், செயற்கையான முறையிலே பாதிக்கப்படுகின்ற அந்த மக்களுக்கு நிரந்தரமான தீர்வு காண செம்பரம்பாக்கத்திலிருந்து வெளியேறு கின்ற நீரைத் தேக்கி வைக்க அரசிடம் செயற்குறிப்பு இருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசினுடைய கவனத்தில் இல்லை. ஆற்றின் கரைகளைப் பலப்படுத்தக்கூடிய செயற்குறிப்பு அரசின் கவனத்தில் இருக்கிறது.

பழனி தொகுதி பாப்பம்பட்டி பஞ்சாயத்திலுள்ள பச்சை ஆற்றில் அணைக்கட்டு.

229—(* வினா எண் 2134) திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் பழனி தொகுதி பாப்பம்பட்டி பஞ்சாயத்து அருகில் உள்ள பச்சை ஆற்றில் அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டப்படும் ?